# பாதுகாக்கப்படவேண்டிய பழங்குடிமக்களின் கலைப்பாரம்பரியம்

## இலங்கையின் வேடுவ சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு–

**திருமதி.பிரசாந்தி இளங்கோ,**

**விரிவுரையாளர்,நுண்கலைத்துறை,**

**கிழக்குப்பல்கலைக்கழகம்.**

**ஆய்வுச் சுருக்கம்**

'தேசத்தின் முதல் மனிதர்கள்' என்ற பெருமையுடன் ஆதிக்குடிகளாக வாழ்ந்துவரும் மக்கள் தொகுதியே பழங்குடிமக்கள். உலகில் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு நாகரீகங்களைக் கொண்ட பழங்குடிமக்கள் வாழ்ந்துவருகின்றனர். தாம் வாழ்கின்ற சூழலில் தமக்கேயுரித்தான சமூகப் பொருளாதாரபண்பாட்டுவிழுமியங்களை உள்வாங்கிவாழ்ந்துவரும் பழங்குடிமக்கள் தமக்கென தனித்துவமான கலைப்பாரம்பரியத்தையும் கொண்டுள்ளவர்கள்.

வேடுவர்கள் இலங்கையில் வாழும் பழங்குடியினரின் ஒருபிரிவினர்.காடுகளே இவர்களின் பூர்வீகம். இவர்களுடைய பண்பாட்டிலே கலைப்பாரம்பரியங்களுக்குத் தனியிடம் உண்டு. இவர்தம் வாழ்வியல் செயற்பாடுகளிலிருந்து கலைகளைத் தனியாகப்பிரித்துப் பார்க்கமுடியாதளவிற்குவாழ்வின் ஒவ்வொரு கூறுகளிலும் கலைச் செயற்பாடுகள் இணைந்துள்ளன. புலிக்கூத்து, கரடிக்கூத்து, சடங்குப் பாடல்கள், கொட்டுப்பறை, சங்கு, குழல் போன்ற இசைக்கருவிகள், மண்ணாலும் மரத்தாலும் செய்யப்பட்ட சிற்பங்கள், கிரிகொரஹ நடனம், மூங்கில், பண்புல், பனையோலை, களி கொண்டு கட்டப்பட்ட கட்டிடங்கள் என்பன இலங்கையின் வேடுவப் பழங்குடிகளின் தனித்துவமான கலையம்சங்களாகும்.

இயற்கைதமக்களித்த ஒவ்வொரு நன்மைகளுக்காகவும் தமது ஆடல் களாலும், பாடல்களாலும், படையல்களாலும், ஓவியங்கள் மூலமும் நன்றிசெலுத்தினர். பயிற்சியோ, எதவிதமுன்னாயத்தங்களோ இல்லாமல் அக்கணத்தில் தோன்றி உருவாகும் சிறப்புத் தன்மை இவர்தம் கலைகளுக்கு உணடு. எகிப்தியபிரமிட்டுகளும், சிந்துவெளியின் கலை எச்சங்களும் பண்டைய நாகரீகங்களையும் அங்குவாழ்ந்த மக்களின் பண்பாட்டு வாழ்வியலையும் வெளிப்படுத்தி நிற்பதைப் போல பழங்குடிமக்களின் வாழ்வியலையும் அவர்தம் பண்பாடுகளையும் அறிந்துகொள்ளக் கூடிய மூலங்களாய் பழங்குடிமக்களின் கலைச்வெளிப்பாடுகள் அமைந்துள்ளன.

ஆனால் காடழிப்பு, நகரமயமாக்கல், நவீனமயமாக்கல், அபிவிருத்தி செயற்பாடுகள், அரசின் சட்டதிட்டங்கள் என்பன உள்நுழைந்தமையால் பழங்குடி வேடுவர்கள் பூர்வீக இடங்களை விட்டுகுடிபெயர்ப்புச் செய்யப்படவும், பலவந்தமாக வெளியேற்றப்படவும் நேரிட்டது. ஏனைய சமூகங்களுடன் இணைந்துவாழ நிர்ப்பந்திக்கப்பட்ட போது வேடுவக் குடிகளின் வாழ்வியலில் பலமாற்றங்கள் நிகழ்ந்தன. நவீனவாழ்வின் கூறுகளுக்குள் தம்மை இணைத்துக் கொள்ளநேரிட்டதால் அவர்தம் தனித்துவமானகலைச் செயற்பாடுகளில் கலப்படங்கள் நிகழ்ந்தன. பழங்குடிகள் கலைகளுக்குள் தமிழ் சிங்களகலைகள் கலந்துவிட்டன. பழங்குடிமக்களின் இளம்பரம்பரையினர் கூட இன்று அவர்களின் கலைகள் தெரியாதளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே, உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளாகவும், பண்டைச் சமூகத்தின் நம்பிக்கைகள், ஐதீகங்களின் வெளிப்பாடாகவும், பண்பாட்டின் மூலங்களாகவும், கலைபற்றிய ஆய்வுகளின் அடிப்படையாகவும், அமைந்த பழங்குடிமக்களின் கலைகள் இன்னும் அழிந்துபோகாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

**கலைச் சொற்கள் : பழங்குடிகள், வேடுவர்கள், கலைப்பாரம்பரியம், மீட்டெடுப்பு, பண்பாட்டுக்கலப்பு.**

**ஆய்வுப் பிரச்சினை** : இலங்கைக்கேயுரிய தனித்துவமான கலைவடிவங்களாகக் காணப்பட்ட வேடுவர்களின் கலைப்பாரம்பரியமானது, பல்வேறு காரணங்களால் மாற்றங்கண்டுவருகின்றது. எனவே இவை மீட்டெடுக்கப்பட வேண்டியது அவசியம்.

**ஆய்வின் நோக்கம்** : இலங்கை வேடுவர்களின் கலைப் பாரம்பரியங்களை அடையாளப்படுத்தல், அவை அழிந்துவருவதற்கான காரணங்களைக் கண்டறிதல். அவற்றைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்ததல், பாதுகாப்பதற்கான வழிவகைகளை முன்வைத்தல்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

**ஆய்வு அறிமுகம்**

வேடுவர்கள் இலங்கையில் வாழும் பழங்குடியினரின் ஒருபிரிவினர். வேட்டையாடலைபிரதான உணவீட்டமாகக் கொண்டுவாழ்பவர்கள். இவர்கள் வந்தேறுகுடிகளாக அல்லாமல் பூர்வகாலமாக இலங்கையில் வாழ்ந்துவரும் மக்கள் கூட்டத்தினர். இவர்களுடைய பண்பாட்டிலேகலைப் பாரம்பரியங்களுக்குத் தனியிடம் உண்டு. இவர்தம் வாழ்வியல் செயற்பாடுகளிலிருந்து கலைகளைப் பிரித்துப்பார்க்க முடியாதளவிற்குவாழ்வின் ஒவ்வொரு கூறுகளிலும் கலைச் செயற்பாடுகள் இணைந்துள்ளன.

இவர்கள் இலங்கையில் ஆரியரின் வருகைக்குமுன்னரே வரலாற்றுக் காலம் முதல் வசிப்பவர்கள். 'இவர்கள் தென்னிந்திய பழங்குடிமரபினருடன் ஒத்ததன்மையான பண்பாட்டு வாழ்வியலைக் கொண்டவர்கள்' எனவில்ஹெய்ம் கெய்கர் தெரிவித்துள்ளார். இவர்கள் தங்களை இலங்கையில் வாழ்ந்த புதிய கற்காலசமூகத்தின் நேரடிவாரிசுகளாகக் கருதுகின்றனர். சிங்களவர்கள் இவர்களைவேடுவர் எனப்பொருள்பட 'வெத்தா' எனப்பெயரிட்டு அழைத்தாலும் இவர்கள் தங்களை 'வன்னியலாஎத்தோ ' என்றே குறிப்பிட்டுக் கொள்கின்றனர். இதற்கு 'காட்டைச் சேர்ந்தவர்கள்','காட்டில் வாழ்பவர்கள்'அல்லதுகாட்டிலுள்ளமக்கள் என்பதாகும்.

இலங்கையின் கிழக்குமற்றும் தென்கிழக்கு பகுதிகளிலுள்ளகாடுகளில் இவர்கள் காணப்படுகின்றனர். உலகிற்குமகத்தானகலை வடிவங்களைவழங்கியவர்களாக பழங்குடிகள் காணப்படுகின்றனர். அவர்தம் கலைகளின் அடிப்படையிலிருந்தேதற்காலக் கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும் காணப்படுகின்றது என்பதுகுறிப்பித்தக்கது. சிற்பக்கலை இசைக்கலை நடனக்கலை கட்டிடக்கலை நாடகக்கலை ஓவியக்கலைஎன்பன இவர்களுக்கேயுரியதனித்துவத்துடன் நிகழ்த்தப்பட்டன. தமக்குநன்மைசெய்த இயற்கைக்கு நன்றி செலுத்துவதற்காகவும், விலங்குகளிடமிருந்துதம்மைப் பாதுகாத்துக் கொள்வதாற்காகவும், உத்தியாக்களிடமிருந்து( இறந்தமுன்னோர்களின் ஆவிகள்) தமதுசடங்குகளுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காகவும், தமதுபண்பாட்டுப் பாரம்பரியங்களின் தொடர்ச்சியாகவும் வேடுவர்களின் கலைச் செயற்பாடுகள் நிகழ்த்தப்பட்டன.

இலங்கைஅரசினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காகப் பெருமளவுகாடுகள் அழிக்கப்பட்டன. வேடுவர்கள் தமது பூர்வீகவாழிடமானகாடுகளை விட்டுவலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுக ்காடுகளை அண்டியிருந்ததமிழ் சிங்களசமூகங்களுடன் இணைந்துவாழநிர்ப்பந்திக்கப்பட்டனர். காடுகளைவாழிடங்களாகவும், வேட்டையாடலைப் பிரதானஉணவீட்டமாகவும் கொண்டு, குலக்குழுவாழ்க்கை முறையைத் தமக்கேயுரியசட்டதிட்டங்களை அனுசரித்து,மிகக் கட்டப்பாட்டுடன் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்துவந்த வேடுவமக்கள், தமதுபூர்வீகநிலப்பரப்பிலிருந்து பிடுங்கியெறியப்பட்டு மாற்றுக் கலாசாரங்களுக்குள் இணைந்து கொள்ளநிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனால் இவர்கள் வாழ்வியலில் வேற்றுப் பண்பாட்டு ஊடுருவல்கள் ஏற்பட்டன. பண்பாட்டுக் கலப்பினால் இவர்களின் கலைச் செயற்பாடுகள் மாற்றங்காணவும் நாளடைவில் மறைந்துபோகும் நிலையும் ஏற்பட்டது.

இதனால் இலங்கையின் ஆதிக்குடிகள்எனப்படும் வேடுவப் பழங்குடிகளின் கலைகலாசாரபாரம்பரியங்களைப் பேணமுடியாதநிலையும், எதிர்காலசந்ததிக்கு அவற்றைப் பாதுகாத்துக் கையளிக்க முடியாதநிலமையும் ஏற்பட்டுள்ளது. இவர்களின் கலை உருவாக்கங்களுக்குள் ஏராளமானபாரம்பரியஅறிவு,திறன்கள் மறைந்துகிடக்கின்றன. பழங்குடிமக்களின் தனித்துவமான மகத்தான அடையாளங்களும் அவர்களின் நுண்ணறிவும், நம்பிக்கைகளும்,ஐதீகங்களும்கூட பொதிந்துகிடக்கின்றன. இலையெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் வேடுவர்களின் கலைப் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

**கண்டுபிடிப்பும் பெறுபேறுகளும்**

வேடர்கள் இலங்கையில் ஆரியரின் வருகைக்குமுன்பாகவரலாற்றுக் காலம் முதல் வாழ்பவர்கள். (குகபாலன.ப.2000:24) இவர்கள் தங்களை இலங்கையில் வாழ்ந்த புதியகற்காலசமூகத்தின் நேரடிவாரிசுகளாகக் கருதுகின்றார்கள். கும்புக்கன் ஓயா,பாணம்பற்று, மல்வத்துஓயா, அநுரதபுரம், அம்பாறை,பிபிலை, மொனறாகலை, தன்மன்கடுவ, வியலுவ போன்ற மலைப் பகுதிகளிலும ்மகாவலிகங்கையின் ஓரங்களிலும் வேடுவர்கள் வாழ்ந்திருந்தனர். (இன்பமோகன்.வ .2020:1)



இலங்கை வேடுவர்கள்
Image source - imagesofceylon.com



இலங்கை வேடுவர்கள்
Image source - imagesofceylon.com

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

இலங்கை வேடுவர்களின் வாழ்வானதுகாட்டுடனும் காட்டுவிலங்குகளுடனும் இணைந்தது. காடுகளை அடிப்படையாக் கொண்டே இவர்களது அன்றாட ஜீவனோபாயம் கொண்டு செல்லப்பட்டது. அந்தவகையில் தேன் எடுத்தல், வேட்டையாடல், கிழங்கு, தானியங்கள் சேகரித்தல், மணிகளைக் கொண்டு அலங்காரப் பொருட்கள் செய்தல் என இவர்களின் அன்றாடவாழ்வியல் காணப்பட்டது. கலையையும் வாழ்வியலையும் பிரித்துப் பார்க்க முடியாதளவிற்கு அவர்தம் வாழ்வியலிலும் வாழ்வியல் சார் சடங்குகளிலும் கலையம்சங்கள் செறிந்துகாணப்பட்டன.

வேட்டையாடுவதற்காகவும் தேன், கிழங்குகளைச் சேகரிக்கவும் காடுகளுக்குள் நுழையும் வேடுவர்கள் அன்றாடம்விலங்குகளின் தாக்குதலுக்கு உள்ளாகநேரிட்டது. உணவீட்டத்தின் போது ஏற்படும் மனித- விலங்கு முரண்னிலையிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவேண்டி இவர்கள் நிகழ்த்தியசடங்குகள் கலையம்சங்களைக் கொண்டிருந்தன. கலைத்தன்மையுடன் நிகழ்த்தப்பட்ட இத்தகைய நிகழ்த்துகைகளைப் புரிந்துகொள்வதனூடாக இந்தக் கலையம்சங்களுக்குள் காணப்படும்வேடுவர் சமூகத்தின் நம்பிக்கைகளையும், பாரம்பரியங்களையும், மரபுகளையும், மந்திரங்களையும், மாந்திரீகங்களையும் அவைபாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தையும் விளங்கிக் கொள்ளமுடியும்.

**புலிக்கூத்து**

இலங்கையில் காணப்படும் கடலோரவேடுவர்களிடம் ‘மாறா’எனும் வேட்டைத் தெய்வம் ஒன்றுஉண்டு. வேடுவர்கள் வேட்டைக்குச் செல்லமுன்னர் இத்தெய்வத்தைவணங்கி, அத்தெய்வத்திடம் அனுமதிகேட்டே, காட்டினுள் வேட்டையாடுவதற்குச் செல்வர். அவ்வாறுசெய்யாமல் விட்டால் நேரும் ஆபத்துக்களை விளக்குவதாக அமைகின்றது கிழக்கிலங்கை வேடுவர்களால் நடாத்தப்படும் ‘புலிக் கூத்து’. இதில் வேடனும் வேடுவிச்சியும் வேட்டையாடுவதற்காக அடர்ந்தகாட்டுப் பகுதிக்குள் செல்கின்றனர். அன்றுவழமைக்குமாறாக தமதுவேட்டைத் தெய்வத்தை வழிபட மறந்து விடுகின்றனர்.

இருவரும் தமது கூட்டாளிகளுடன் வேட்டையாடிக் கொண்டிருக்கும் போது எதிர்பாராதவிதமாகப் புலியிடம் சிக்கிக் கொள்கின்றனர். வேடுவனையும் புலி கடித்துவிடஅவனும் மயங்கிவிடுகின்றான். மயங்கியதன் கணவனையும் ஏனையோரையும் புலியிடமிருந்துகாப் பாற்றி இருப்பிடம் கொண்டுவருகிறாள் வேடுவிச்சி. குலத்தலைவருக்குக் குறித்தசம்பவம் எடுத்துச் சொல்லப்படுகின்றது. வேடுவர்களும் தமதுபிழைகளை அறிந்து கொள்கின்றனர். தமதுதவறுக்காக தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்கின்றனர். சமூகமக்களின் ஒன்றிணைப்பு, சமூகத்தில் காணப்படும் குறைகளைக் களைந்து நேர்த்தியான சமூக இயக்கத்திற்கான அடிப்படைகளை உருவாக்குதல். தேவைகளைப் பூர்த்தி செய்து தரும்படி தெய்வத்திடம் மன்றாடுவது, தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் நன்றியுடன் காணிக்கைகைகள் செலுத்தி ஆடிப்பாடிநேர்கடன் தீர்ப்பதுஎன்பன இப்புலிக்கூத்துடன் தொடர்புடைய நம்பிக்கைகளாகவும் ஐதீகங்களாகவும் காணப்படுகின்றன.












**யானைகட்டுதல்**

கடலோரவேடுவர்களிடம் வேட்டையாடுதலைத் தவிர்த்துசேனைப்பயிர்ச் செய்கைகளும் காணப்படுகின்றன. யானைகட்டுதல் நிகழ்த்துகையானது சேனைப்பயிர்ச் செய்கையுடன் தொடர்புடையஓர் ஆற்றுகையாகும்.

வேடுவர்கள் சேனைப் பயிர்ச் செய்கைக்காகக் காடுகளைச் சீர் செய்யும் போதும், பயிர்கள் விளைந்துநிற்கும் போதும் காட்டுயானைகளால் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர். நீண்டநாள் பிரயத்தனத்தின் பின்னர் இவ்வாறுதம்மை அச்சுறுத்தும்யானையினைத் தம்வசப்படுத்திக் கொள்கின்றனர். குறிப்பிட்டகாலத்தின் பின் யானைக்கு உதவியாக இவர்களும், இவர்களுக்கு உதவியாகயானையும் மாறிவிடுகின்றனர்.



இயற்கையை நேசிப்பதன் மூலமும், இயற்கையின் வழி வாழ்முறைகளின் மூலமும், இயற்கையைத் தம்வயப்படுத்தி எது விதசங்கடங்களும் இல்லாமல் வாழமுடியும் என்பதற்கு இவ்வாற்றுகைசான்றாகும். சமகாலத்தில் விலங்குகளின் வாழ்விடங்களை, மனிதர் தமக்கானவாழிடங்களாகவும் வயல்நிலங்களாகவும் அபகரித்துக் கொண்டபின்னர் மனிதவிலங்கு முரண்ணிலையானது உச்சத்ததையடைந்துள்ளது. பயிர் பச்சைகளைக் காப்பதற்காக அமைக்கப்படும் மின்சாரவேலிகளிலும், பொறிகளிலும் மாட்டி உயிர்துடிக்கமடிந்துசாகும் விலங்குகள் ஏராளம். அதுமட்டுமின்றி கட்டுத்துப்பாக்கிகளால் சுடப்பட்டும், வெடிவைத்துக் கலைத்தும் விலங்குகள் காயப்படுத்தப்படுகின்றன.

விலங்குகளுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாமல் அவற்றைத் தம்வயப்படுத்தி, அவற்றுடன் தோழமை கொண்டுதமதுவாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பழங்குடிமக்களின் கலைப்பாரம்பரியங்கள் மீட்டெடுக்கப்பட்டு அவற்றின் ஆற்றுகை அர்த்தங்கள் வெளிக்கொண்டுவரப்படும் போது, அதுநாளுக்குநாள் உக்கிரமடைந்து செல்லும் மனித–விலங்கு மோதல்களின் விளைவால் விலைமதிப்பில்லாத உயிர்களைக் காவுகொள்ளப்படுவதைத் தடுப்பதற்கான வழிமுறையாகவும் கொள்ளவும் முடியும்.

**கரடிக்கூத்து**

கடலோரவேடுவர்களிடம் காணப்படும் புலிக்கூத்தினைஒத்தஆற்றுகையேகரடிக்கூத்து. இது வேட்டையாடுதலுடன் தொடர்புடையஇன்னொருஅம்சமானதேனெடுத்தலுடன் தொடர்புடையது. ஒருவேடுவகுழுதேனெடுக்ககாட்டிற்குச் செல்கின்றனர். அதேவேளைகரடியும் தேன் குடிக்கச் செல்கின்றது. கரடியைப் பின்தொடர்ந்துசென்றால் தேனிருக்கும் இடத்தினை இலகுவாகஅடைந்துவிடமுடியும் எனும் தந்திரத்துடன்வேடுவர்களும்குறித்தகரடிக்குப் பின்னால் செல்கின்றனர்.

கரடி ஒருமரப் பொந்திலிருந்துதேனெடுத்து உண்பதைக் கண்ட இளம் வேட்டைக்காரன் ஒருவன் தேனைக் கண்டஆவலினால் சத்தமிட்டுவிடுகின்றான். உடனேவிழிப்படைந்த கரடி வேட்டைக் காரர்களைக் கடிக்கத் துரத்துகின்றது.வேட்டைத் தெய்வமானமாறாவின் துணையுடன் அவர்கள் தப்பித்துக் கொள்கின்றனர். வேட்டையின் போதுபொறுமையின் தேவை, விலங்குகளைதமது உணவீட்டலுக்கான வழிகாட்டிகளாக வேடுவர்கள் எவ்வாறுபயன்படுத்திக் கொள்கின்றார்கள், இயற்கை அனைத்து உயிர்களுக்கு மானதுஎனும் வாழ்க்கை நெறிகளைக் கடத்துவதாக இவ்வாற்றுகை நிகழ்த்தப் படுகின்றது. இன்றுபூமியும் அதன் வளங்களும் தமக்குமட்டுமே சொந்த மெனநினைத்து அவற்றைச் சுரண்டி அபகரித்துக் கொள்ளும் காலனித்துவ செயற்பாடுகளுக்கும், உலகப் போர்களுக்கும் மத்தியில் உலகமும் அதிலுள்ளவளங்களும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானவையாகக் கருதும் வேடுவர்களின் நிகழ்த்துகைக் கலைகள் உணர்த்தும் செய்திகள் காலத்தால் பாதுகாக்கப்பட வேண்டியவை.

**இசைக்கலை**

வேடர்களால் மேற்கொள்ளப்பட்டகலைச் செயற்பாடாகஇசைப்பாடல்கள் கொள்ளப்படத்தக்கன. இவை வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டுசடங்குநடனத்தின் போதுபாடப்பட்டன.வேடர்களின் வாழ்வின் நோக்கை,வாழ்க்கைத் தேவையைகலையின் மூலம் வெளிப்படுத்துவதை நோக்காகக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம். பொதுவாக இப்பாடல்கள், பாடுவதில் சிறப்புத் தேர்ச்சியுடையவர்களால் பாடப்பட்டன. இவை உள்ளக்கிளர்ச்சியின் வெளிப்பாடாகக் கொள்ளப்படத்தக்கவை (இன்பமோகன்.வ.2020:68) இப்பாடல்கள் எல்லாமே சாதாரணமான நாளாந்தவாழ்வியல் செயற்பாடுகளின் வெளிப்பாடுகளாகக் கொள்ளத்தக்கவை.

அச்சம் நிறைந்தவனாந்தரவாழ்க்கையின் நடுவேதாம் இன்புற்றிருந்தகணங்களில் ஆடிப்பாடியபாடல்களாக இப்பாடல்கள் அமைந்திருந்தன. ‘இப்பாடல்களைதாலாட்டுப் பாடல்கள்,காதல் பாடல்கள் ,சோகத்தை வெளிப்படுத்தும் பாடல்கள், வேட்டை, தேன் எடுத்தல் போன்ற செயற்பாடுகளின் போதுபாடப்படும் பாடல்கள், குலதெய்வச் சடங்கின் போதுபாடப்படும் பாடல்கள் எனவகைப்படுத்தலாம். (மேலது.2020:78)



© 2024, IRJTSR 

வேடுவர்கள் பாடல்களைப் பாடும் போதுசொற்கள் வெளிப்படுத்தும் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. குறிப்பிட்டகணத்தில் நினைவில் வரும் சொற்களைக் கொண்டே பாடல்களைப் பாடுகின்றனர். இதனால் இப்பாடல்கள் கருத்துடையவையாக இருப்பதில்லை. பாடல்களின் ஓசைஒரேமாதிரியாகவே அமைந்திருக்கும். ஆனாலும் சந்தர்ப்பத்திற்கேற்ப பாடல்களை உடனே கட்டிப்பாடும் திறனும், சொற்களைக் கோர்த்துப் பாடலாக்கும் திறனும் அவர்களிடம் சிறப்பாகக் காணப்பட்டது. பிற்காலத்தில் கவிபாடும் கலைமரபு உருவாகிவளர்வதற்கும் இவர்களது இசைக்கலை அடிப்படையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இவர்களிடமுள்ள இக்கலைமரபுவழக் கொழிந்துபோயுள்ளது. இதனால் சந்தர்ப்பத்திற்கேற்ப இட்டுக் கட்டிக் கவிபாடும் மரபும் இன்றுவழக்கிலிருந்து அழிந்துவருவதைக் காணலாம்.

சடங்குகளில் ஒவ்வோரு தெய்வத்திற்கும் ஒவ்வொருபாடல் பாடப்பட்டது. கடலில் மீன்பிடிக் உதவி செய்யும் 'மாதலிக்காதே' தெய்வத்திற்குப் பாடப்படும் பாடல்

'நாமாளேநாமாளே

முதுமாளேஅள்ளாளா

முதுமேயென் கெரிஅல்லா

கொயகொயமுதுமாளே

நீமாளேகிரியள்ளா

யன பாறேயனபாறேஓ…மொகுதேகெரியள்ளா'

என அமைந்துள்ளது. களுவன்கேணிவேடுவசமூகத்தினரின் வழிபாட்டில் பிற்காலத்தில் இணைந்து கொண்ட தெய்வம் கப்பல் தெய்வம். இத்தெய்வத்திற்குப் பாடப்படும் பாடலாக (சண்முகம்.கு. 2019.53)

காலியோகொழும்போசென்னைப் பட்டினமோ

யாணயாணான் வேதோ

அழுத்தன் வந்தால் புவனமே

சீலையோகாட்டஆணாச்சினன்

மேசீனகராஜட்ட…

எனத் தொடர்கிறதுபாடல்(சண்முகம்.கு.2019:53). மட்டக்களப்பின் களுவன்கேணிப் பகுதிக்குக் கடல் பயணம் வந்தபாய்க்கப்பலையும் அதில் வந்தமனிதர்களையும் தெய்வமாகமதிக்கின்றதன்மையை இப் பாடல் காட்டுகின்றது. வருபவர்களை இருகரம் கூப்பிவணங்கிவரவேற்பது மட்டக்களப்பின் சமூகப் பண்பாட்டில் ஒன்று. தெய்வத்தை இருகரம் கூப்பிவணங்குவதும் உண்டு. எனவே வருபவர்களைவணங்கிவரவேற்பது பழங்குடிப் பண்பாட்டிலிருந்து மட்டக்களப்புப் பண்பாட்டிற்குள் நுழைந்திருக்கலாம் என்பது இப்பாடல் மூலம் உணரமுடிகின்றது. இத்தகையஉயர் பண்பாட்டுக் கூறுகளை பாடல்களுக்குள் கொண்டிருக்கும் பழங்குடிமக்களின் கலைப்பாரம்பரியம் மீட்டெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானதே.

வேடுவர்களின் தாலாட்டுப் பாடலொன்றுபின்வருமாறுஅமைகின்றது.

அப்பி ரோ ரோபெட்டுனே

தொபிநிதிநிதிபெட்டுனே

குலவெல்லாகங்கதிகே

தொபிநிதிநிதிபெட்டுனே

புன்செல்லாதங்கதிகே

தொபிநிதிநிதிபெட்டுனே

வெள்ளைப் பூக்களைக் கொண்ட ஆற்று நெடுவெளியில் நாம் வந்தோம். வெண்ணிறமணல் வெளிகளைக் கொண்டநிர் நிறைந்தநீர்க் குழிகள் இருக்கும் ஆற்றுவெளியில் நாம் வந்தோம்…என்று பிள்ளைகள் நாளாந்தம் உலவித் திரிகின்றகாட்டுவழிகளை நினைவுபடுத்துவதாக இவை அமைவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார் (இன்பமோகன்.வ.2020:81). காட்டுவழிகள் இலகுவில் கண்டுபிடிக்க முடியாதவை. அவ்வழிகளைத் தாலாட்டில்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 04 October to December 2024 www.irjtsjournal.org

மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திதம் பிள்ளைகளின் வேட்டைச் செயற்பாடுகளை பாதுகாப்பானதாக மாற்றும உத்தியாகவும் இப்பாடல்கள் அமைவதைக் காணலாம்.

இங்கு 'தொபிநிதிநிதிபெட்டுனே' எனும் வரி ஒன்று விட்டு அடுத்தடுத்துப் பயன்படுத்தப்படுகின்றது. தழிழர்களின் கூத்துமரபிலுள்ளகாத்தவராயன் கூத்திலும் இத்தன்மையைநாம் காணலாம்.

மஞ்சளெல்லோ அண்ணாமணக்கு தென்று–நீங்கள்

மதிமயக்கம் அண்ணா கொள்ள வேண்டாம்

அத்தரிங்குஅண்ணாமணக்கவில்லை–நீங்கள்

அதிமயக்கம் அண்ணாகொள்ளவேண்டாம்…

வீரகுமாரன் நாடகத்தில் இது இவ்வாறுபயன்படுத்தப்படுகின்றது.

இந்தப் பிரளயத்திற் கென்னநான் செய்குவேன்

ஈஸ்வராஈஸ்வரா–நானும்

எப்படித் தாண்டிப் போய் அக்கரைசேருவேன்

ஈஸ்வராஈஸ்வரா…


ஈழத்தில் தமிழர் கலைமரபில் பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட இத்தகைய கூத்துக் பாடல்களுக்குவேடுவர்களுடையபாடலாக்கமுறைகள் ஆதாரமாயமைந்துள்ளமையைகாணமுடிகிறது.


மேலும் வேடர்கள் தம் வாழ்வில் நடந்தஆபத்தானசம்பவங்களையும் பாடல்களாகப் பாடி,மற்றவர்கள் அத்தகையஆபத்துக்களிலிருந்துதப்பித்துக் கொள்வதற்குவழிகாட்டுகின்றனர். ஆண் பெண் காதல்,சிறுவர்களின் மகிழ்ச்சி,வேட்டையின் சூட்சுமங்கள் எனவாழ்க்கையின் பலசம்பவங்களையும் பாடல்களாகப் பாடிமீட்டுப் பார்த்துக் கொண்டுதம் ஓய்வுநேரங்களைக் கழித்துள்ளனர்.











பலநூறுவருடங்களுக்குமுன்னர் வாழ்ந்தவேடுவமக்களின் இசைநுணுக்கங்கள் பிற்கால இசைமரபுகளிலும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆனால் இத்தகைய பெறுமதிவாய்ந்த பழங்குடிமக்களின் இசைமரபுகள், இன்றைய இசைமரபுகள் பலவற்றிற்கு மூலமாகவும் தோற்றுவாயாகவும் அமைந்துள்ளன. எனவேஅவைஅழியாமல் பாதுகாக்கப்படவேண்டியதுகாலத்தின் அவசியமாகும்

**நடனக்கலை**

இலங்கையின் பூர்வீகக் குடிகளானவேடுவர்களுக்கே உரித்தானநடனவடிவமாககிரி கொரஹநடனம் காணப்படுகிறது. இந் நடனம் வேடுவசமூகத்திற்கு சமூகம் வேறுபடுகின்றது. கிரிகொரஹ, காட்டையும் தெய்வத்தையும் வணங்குகின்ற ஆட்டம (சரவணபவன்.க.2020:26). இதுவனத்தில் வேட்டையாடும் மிருகங்கள் குறைவடைந்தால் வன தெய்வத்தின் ஆசியை வேண்டிநிறை வேற்றப்படும் ஒருசடங்குநடனம் ஆகும். அத்துடன் காட்டிலுள்ளமிருகங்களிட மிருந்துபாதுகாப்பை வேண்டியும் இந்நடனத்தை நிகழ்த்துகின்றனர்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR 



வேடுவசமூகத்தின் திருமணங்கள்,சடங்குகள் உள்ளிட்டமுக்கியநிகழ்வுகளின் போதும் இந்நடனத்தை ஆடுகின்றனர். இது இவர்களது பூர்வீகத்துடன் இணைந்தது. ஆண்களும் பெண்களும் ஒன்றாகஆடும் இவ்வாட்டம் இரவுநேரத்திலேயே ஆடப்பட்டது. நன்றியுணர்வும் நம்பிக்கைகளும் நிறைந்துநிகழ்த்துகை செய்யப்பட்ட இந்நடனநிகழ்வுசமகாலத்தில் உள்ளூர் வெளியூர்ப் பார்வையாளர்களுக்காகவும் வெளிநாட்டுசுற்றுலாப் பயணிகளைமகிழ்வித்துப் பொருளீட்டும் பொழுதுபோக்கு நிகழ்வாகவுமே நிகழ்த்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

**ஓவியக்கலை**

இலங்கையில் பழங்குடிக்கலை (Primitive Art) எனப்படும் குகை ஓவியங்கள் உள்ள 54 இடங்கள் இருப்பதாககண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அம்பாறை, மொனராகலை இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கேகாலை ஆகியமாவட்டங்களில் இவை அதிகளவுகாணப்படுகின்றன.

ஆரம்பகாலவேடர்கள் குகைகளிலேயேவாழ்ந்தனர். இயற்கையோடு இணைந்து இவர்கள் வாழ்ந்தவாழ்வின் வெளிப்பாடுகள் கோடுகளாகவும் உருவங்களாகவும் குகைச்சுவர்களில் வரையப்பட்டிருந்தன. ஆண்,பெண் உருவங்கள்,பல்வேறுபட்டமிருகங்கள்,தேனைச் சேமித்துவைக்கும் குடுவைகள் போன்றனகுறிப்பிடத்தக்கன. சாம்பர் உமிழ்நீருடன் கலந்துகூரமாக்கப்பட்டு வரைபுகளைக் கையினால் மேற்கொண்டுள்ளனர் (இன்பமோகன்.வ.2020:69).



இவற்றில் ஓவியம் ஒன்றுக்கான நேர்த்திகருத்து வெளிப்பாடு,அளவுப் பிரமாணம் போன்ற அடிப்படைகள் எதுவும் இல்லாதபோதும் குறியீட்டுப் பாணியிலான ஒருசித்திரிப்புத் தன்மையை இவற்றில் காணமுடிகின்றது.

தமதுபடைப்புக்கள் இலகுவில் அழிந்துவிடக் கூடாதுஎன்பதில் இவர்கள் மிகுந்தகவனத்துடன் இருந்திருக்கின்றனர். இதற்காகமழையும் வெயிலும் படாதகுகைப்பகுதிகளை இவர்கள் தெரிவுசெய்துள்ளனர். அதுமட்டு மின்றிவரையும் ஊடகங்கள் கூட மங்கிப் போகாததன்மையுடையனவாக இருப்பதில் கவனம் செலுத்தியுள்ளனர். சாம்பலை உமிழ்நீருடன் கலந்துகூரமாக்கிப் பயன்படுத்தியுள்ளனர். விலங்குகளின் மேல் புள்ளிகளைவைப்பதற்காககரியைப் பயன்படுத்தியுள்ளனர். (இன்பமோகன்.வ.2020:69)

ஓவியக்கலையின் பிற்காலவளர்ச்சியில் உலகப்புகழ் பெற்ற அஜந்தா, எல்லோரா, சிகிரியாஓவியங்களின் தோற்றத்திலும், வர்ணத் தெரிவு, கையாள்கை, பிரயோகம் என்பவற்றிலும் கூடபழங்குடிவேடுவர்களின்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

ஓவியநுட்பங்கள் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம் என்பதை ஊகிக்கமுடிகின்றது. இவ்வோவியங்கள் வெறும் கோட்டுச் சித்திரிப்பாக அமைந்திருந்தாலும் பழங்குடிமக்களின் அறிவியலையும்,பண்பாட்டுவாழ்வியலையும் தலைமுறைகளுக்குக் கடத்தும் பெறுமதிமிக்க செயற்பாடுகளாகவும் அமைகின்றன.

மனிதகுலவளர்ச்சியின் ஆரம்பநிலையினை உலகிற்கு உணர்த்தும் கட்புலஆதாரங்களாக பழங்குடிமக்களின் குகை ஓவியங்கள் அமைகின்றன. அவைமேலும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு புதியதகவல்கள் அறியப்படவும் கண்டுபிடிப்புக்கள் இடம்பெறவும் இக்கலைப் படைப்புகள் மீட்டெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். இவற்றிற்குமேலாகப் பழங்குடியினரின் கலைப்பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படுவதற்கான வேறுசிலகாரணங்களையும் இங்குகுறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது

**பழங்குடிக் கலைகளைப் பாதுகாப்பதன் அவசியம்**

பழங்குடியினரின் கலாசாரபாரம் பரியங்களையும், மற்றும் வரலாற்றின் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கும் அவர்களின் கலைகளைப் பாதுகாப்பு அவசியம். எதிர்காலசந்ததியினருக்குப், பழங்குடியினர் பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், ஐதீகங்கள், கலை, கைவினைகள் என்பவைபற்றிய அறிதலைவழங்கவும், பண்பாட்டுத் தொன்மையைகண்டறியவும், தொல்குடிகள்தம் அழகியல் ரசனைகளைப் புரிந்துகொள்ளவும் வழிவகுக்க வேண்டுமாயின் பழங்குடிமக்களின் கலைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுப்பது முக்கியம்.

தற்காலத்தில் வேடர்கள் சமூகம் பலமாற்றங்களை எதிர்கொள்ளும் இனமாகமாறியுள்ளது. வேடர்களின் மேல் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புக்கள்,வாழிட இழப்புக்கள், உலகமயமாக்கல், நகரமயமாக்கல், நவீனமயமாக்கல் போன்ற சமூகமாற்றங்கள் என்பவற்றால் இன்று இலங்கையிலிருந்து அருகிக் கொண்டுவரும் இனமாகவேடர் சமூகம் மாறியுள்ளது. இவர்கள் வாழிடங்கள் மேல் நடாத்தப்பட்ட ஆக்கிரமிப்புக்களால் தமிழ், சிங்களப் பகுதிகளைச் சார்ந்துவாழும் இவர்கள் காலப் போக்கில் தமிழ்,சிங்கள, முஸ்லீம் பிரிவுகளுக்குள் உள்வாங்கப்படும் வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்,சிங்களமக்களின் பண்பாட்டுஊடாட்டம் வேடர்களின் பண்பாட்டு இழப்பிற்கும், பண்பாட்டில் முகிழ்த்துள்ளகலைகளின் இழப்பிற்கும் காரணமாயுள்ளது. இதனால் வேடர்கலைகளின் தனித்துவங்கள் இழக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது இந்நிலையில், அவர்களின் கலைகள் பாதுகாக்கப்பட வேண்டிய தேவைகள் அழுத்தமாக்கப்பட்டுள்ளன.

வேடர்களின் பண்பாட்டு இழப்பைத் துரிதப்படுத்தும் கலப்புத் திருமணம், மதமாற்றம், பாஷை இழப்பு, போன்றன அவற்றுடன் இணைந்தகலைச் செயற்பாடுகளின் தனித்துவத்தை இழக்கச்செய்துள்ளன. இவர்களின் இனக்குழும அடையாளமாக அமையும் வேடபாஷையிலேயே இவர்களின் மந்திரங்கள், பாடல்கள், சடங்குகள் என்பன இடம் பெறுகின்றன. இவை அவர்களுக்கேயுரியதனித்துவ அடையாளங்களாகும். எனவேதமிழ் சிங்களமொழிகள் மட்டுமல்லாமல், இலங்கைகாலனியமானதால் உள்வாள்ளப்பட்ட போர்த்துக்கேய, ஒல்லாந்து, ஆங்கிலேயமொழிக் கலப்புகளும்வேடர் மொழியில் கலப்பாக்கம் செய்துஅதன்மூலம் அவர்தம் தனித்துவமான கலைகளுக்குள் ஊடுபாய்ந்துவிடாமல் காக்கவேண்டியது அவசியம்.

பழங்குடி சமூகங்களில் தனித்துவமான அடையாளங்களை பேணவும், அவர்களின் வரலாறுகளுக்கான ஓர் ஆதாரமாககலைகள் காணப்படுவதாலும் அவைபாதுகாக்கப்பட வேண்டியகடமைப்பாடு உள்ளது. கடந்தகால சமூகங்களின் பாதுகாப்பு முயற்சிகள் இல்லாமல், மனிதவரலாற்றின் இந்தவிலை மதிப்பற்ற அம்சங்கள் சமூகப் பண்பாட்டிலிருந்தும், பயன்பாட்டிலிருந்தும் மறக்கப்படும் அல்லது மறைக்கப்படும் அபாயம் உள்ளது. பழங்குடிகள் கலைகள் வழக்கொழிந்து போகும் பட்சத்தில், எதிர்காலசந்ததியினர் மனிதவரலாற்றின் பன்முகத்தன்மையிலிருந்து கற்றுக் கொள்ளவும் அவற்றின் பெறுமதிகளைப் போற்றவும், பாராட்டவும் வாய்ப்பை இழக்கின்றார்கள்.

இலங்கையின் ஏனைய சமூகத்தினர், உலகமயமாக்கல், நகரமயமாக்கல் காரணமாக மேலைத்தேயப் படுத்தப்பட்டதங்களின் பண்பாட்டு அறிவியலில் இருந்து, பழங்குடி மக்களின் பண்பாட்டு அறிவியலை ஒப்பாய்வு செய்கின்றனர். இதன் விளைவாக தங்களிலிருந்து வேறுபாடான பண்பாட்டினை நாகரீகமடையாத, கீழ்மைப்படுத்தப்பட்ட பண்பாடாககணித்தனர். இதனால் பழங்குடி மக்களின் கலைப்படைப்பாக்கம்சார் அனுபவஅறிவும், அதற்கான நுட்பங்களும், கணப்பிரசன்னமாக உருவாக்கப்படும் கலையாக்கங்களும் காலாவதியாக்கப்படும் நிலையிலிருந்து மீட்டெடுக்கப்படல் வேண்டும்.

இன்றையநவின வாழ்க்கை முறையானது சேர்ந்துவாழ்தல், கூட்டுவாழ்க்கை என்பவற்றை சாத்திய மற்றதாய் மாற்றிவிடுகின்றது. இதுகுடும் பங்களாகவும், குலங்களாகவும், சாதியத் தனித்தன்மையுடன், அவற்றிற்கான தனித்துவமான பண்புகளுடன், குடும்பக், குல, சாதிக்கான தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்ட பழங்குடிமக்களின் கூட்டுக் கலைச்செயற்பாடுகளை இல்லாமலாக்கிமனிதர்களைத் தனியன்களாகவாழும் வாழ்வியலைக் கட்டமைத்துள்ளது. பழங்குடிமக்களிடம் தனித்தியங்கும் பண்பாட்டுவாழ்வியல் காணப்படவில்லை. ஓய்வுநேரங்களில் உருவாக்கிய ஓவியங்களாக இருக்கலாம், இசை, நடனச் செயற்பாடுகளாக இருக்கலாம் அனைத்துமே கூட்டுழைப்பில் உருவாகியவையாகும். பழங்குடிக்கலைகளைப் பாதுகாப்பதனூடாக அவர்களிடமிருந்த கூட்டுவாழ்க்கை முறை, கூட்டுத் தொழில்முறை, கூட்டுக் கலைச் செயற்பாடுகள் என்பவற்றையும் அவற்றால் விளைந்த நன்மைகளையும் நலிவடையாமல் பாதுகாக்க முடியும்.



© 2024, IRJTSR 

இன்றைய நவீனகலைகளுக்கு மத்தியில். பழங்குடிமக்களின் கலைகளை, அழகற்றதாவும், செம்மையற்ற வடிவங்களாகவும் கூறிஅவற்றை ஐரோப்பியரசனைக் கேற்பஅழகியல் படுத்தவும், செம்மையாக்கவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில், மேற்கத்தேய அழகியல் கோட்பாடுகளுக்கமையசமநிலை, சமச்சீர், பிரமாணங்கள் என்பவைஅதில் தேடப்பட்டன வேதவிர அம்மக்களுக்கேயுரியதனித்தன்மைகளை அதற்குள் செறிந்திருக்கும் அழகியலையும் அடையாளம் காணமுயற்சிக்கவில்லை.

பழங்குடிமக்கள் தங்கள் கலைச் செயற்பாடுகளுக்குள், தமக்கேயுரித்தான நம்பிக்கைகள், ஐதீகங்கள், விழுமியங்கள், தொன்மங்கள் என்பவற்றைப் பிணைத்துவைத்திருந்தனர். நிகழ்த்துகைகளூடாக வேதம் கலைகளை அடுத்ததலை முறைக்குக் கையளித்து அவற்றை உயிர்ப்புடன் வைத்திருந்தனர். பழங்குடிமக்கள் வாழ்ந்த சூழலுக்கும் அவர்களின் கலைச் செயற்பாடுகளுக்கும் நெருக்கமான தொடர்புகள் காணப்பட்டன. ஆனால் இலங்கையில் ஏற்பட்டமகாவலி அபிவிருத்தித் திட்டம், கல்லோயாகுடியேற்றத்திட்டம், மாதுறுஓயாபூங்கா அமைக்கும் திட்டம், போன்றவற்றால், இலங்கைப் பழங்குடிகள் தாம் வாழ்ந்தகாடுகளுக்குள் இருந்து வெளியேற்றப்பட்டனர். வலுக்கட்டாயமாகஅவர்கள் வாழிடங்கள் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன. இதனால் இயற்கையோடிணைந்து, இயற்கையையும், விலங்குகளையும் கட்டுப்படுத்தி,தாம் வாழ்ந்தவாழ்வின் வெளிப்பாடுகளாக அமைந்தகலைச் செயற்பாடுகளும் வழக்கொழிந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பழங்குடிமக்களின் தொழில்முறை, வாழ்க்கை,மற்றும் வழிபாடுகள், சடங்குகள், அவற்றோடிணைந்த நம்பிக்கைகள் என்பனகலைகளோடு உணர்வுரீதியாகமிக நெருக்கமான ஊடாட்டத்தைக் கொண்டிருந்தன. வளங்களை வேண்டியும், பாதுகாப்பை வேண்டியும் தமது பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்ளவும் சிலசமூகங்களில் வேட்டைக்குப் போவதற்கு முன்னும், சடங்குகளையும் வழிபாடுகளையும் செய்தனர். சடங்குகள் ஒவ்வொரு சமூகத்தினதும் பூர்வீகப் பண்பாட்டு அடையாளம். இந்தசடங்குகளின் போதுபாடப்பட்ட பாடல்களும் ஆடப்பட்ட நடனங்களும் அவற்றுள் பொதிந்திருந்த நம்பிக்கைகளும், அந்தநம்பிக்கைகளின் மேல் கட்டியெழுப்பப்பட்ட வாழ்க்கை முறைகளும் இன்றையகலப்புப் பண்பாட்டுச் சூழலுக்குள் தொலைக்கப் பட்டுள்ளன. விரும்பியோ விரும்பாமலோவாழும் சூழலுக்குத் தன்னமைவாக வேண்டிய கட்டாயத்திற்குள் பழங்குடிமக்களின் கலைகளும், அவைசார்ந்த நம்பிக்கைகளும், ஐதீகங்களும் காலாவதியாகிப் போய்விட்டமைகவனிக்கப்பட வேண்டியுள்ளது. இதனால் பண்பாட்டுத் தொன்மையறியும் ஆய்வுகளுக்கான மூலங்களை ஆய்வாளர் இழந்துவருவதும் குறிப்பிடத் தக்கவிடயமாகும். எனவே இவையெல்லாவற்றையும் சீர்செய்து கொள்வதற்கு வேடுவப் பழங்குடியினரின் கலைச் செயற்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**நிறைவுரை**

இயற்கையோடு இணைந்தவாழ்வின் பெறுமதிகளைக் கொண்டிருந்த இலங்கையின் வேடர் சமூகம், தனக்கெனத் தனித்துவமான பண்பாட்டு வாழ்வியலையும், கலையம்சங்களையும் கொண்டிருந்தது. அவர்கள் கலைகள் வெளிப்படுத்தும் நுண்ணுணர்வுகளும், அழகியலும் தனித்துவமானவை. ஆனால் இலங்கையில் காலத்தின்கண் ஏற்பட்ட சமூகப்பண்பாட்டு, அரசியல், அபிவிருத்தி மாற்றங்களால் வேடுவர்களின் கலைகள் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கும், சுற்றுலாத் துறையினருக்கும் காட்சிப்பொருளாகும் அபத்தமானநிலை ஏற்பட்டுள்ளது. இக்கலைகள் வேடுவர்களின் பூர்வீகப் பண்பாட்டு அடையாளங்களின் உயிர்ப்பைத் தமக்குள் கொண்டிருந்தன. இலங்கையின் முதற்குடிகளாகக் கருதப்படும் இவர்களது பண்பாடும் அதனை அடிப்படையாகக் கொண்டெழுந்த கலையாக்கங்களும் தனிச்சிறப்புடையன. இக்கலையாக்கங்கள் பிரதிகளும், ஒத்திகைகளும் இல்லாதுகணப் பிரசன்னமாகத் தோன்றுவன. கலையாக்கங்கள் வாழ்வியல் செயற்பாடுகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாமல் வாழ்வின் ஒரு அங்கமாகவேமாறியிருந்தது. இவை தனிமனித நிகழ்த்துகைகளாக இல்லாமல், சமூகத்தை ஒன்றிணைக்கும் கூட்டுச்செயல்வடிவமாக வேகாணப்பட்டது. சமூகத்தின் பெறுமானங்களும், வாழ்வியல் நுணுக்கங்களும், தலைமுறைகளுக்கான வழிகாட்டல்களும் கலைவடிவங்களுக்கூடாகவே வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இத்தகையசிறப்புப் பெற்றிருந்த இக்கலைகள் இன்று செல்வாக்கிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைமக்களின் பண்பாட்டுத் தொன்மத்தை அறியவும், அவற்றைப் பாதுகாக்கவும், பறைசாற்றவும் ஆதிக்குடிகளான வேடுவர்களின் கலைப்பாரம் பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.

**துணைநூற்கள்**


[1] இன்பமோகன்.வ. .இலங்கையில் வேடர். கொழும்பு–சென்னை. குமரன் புத்தக இல்லம்.(2020)

[2] கிருஷ்ணராஜா.செ. இலங்கைவரலாறு: பாகம் 2(கி.பி.1505 -கி.பி 1796) யாழ்ப்பாணம்,பிறைநிலாவெளியீடு

[3] நவரெத்தினம். கு,இலங்கையில் கலைவளர்ச்சி. கொழும்பு,சென்னை. குமரன் புத்தக இல்லம்.,.(2007)

[4] சண்முகம்.கு.களுவன்கேணிவேடுவப்பரம்பரையினரின் வழக்காறுகள். கிழக்குமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்..(2019).

[5] சரவணபவன்.க. கிழக்கின் பழங்குடிகள். திருகோணமலைவெளியீட்டாளர்கள்.(2020),

[6] இன்பமோகன் .வ. நெய்தல்,நகரமயமாக்கல் சுதேசகிராமியபண்பாட்டில் ஏற்படுத்தியபாதிப்புக்கள்,கலைகலாசாரபீடம் கிழக்குப் பல்கலைக்கழகம். இலங ்கை. தொகுதி 10,எண் 11.(2021),

[7] இன்பமோகன் .வ. மொழிதல். காலனித்துவபின்காலனித்துவகருத்தியலுக்குள் பழங்குடியினரின் கலைகள்,சுதந்திர.ஆய்வுவட்டவெளியீடு,மட்டக்களப்பு,தொகுதி– 5. எண்.(2018)

[8] மௌனகுரு. சி. மட்டக்களப்புமரபுவழிநாடகங்கள். மட்டக்களப்பு. விபுலம் வெளியீடு.(1998),

[9] நவரெத்தினம். கு,.இலங்கையில் கலைவளர்ச்சி. கொழும்பு,சென்னை. குமரன் புத்தக இல்லம்.,.(2007)

[10] பத்திநாதன்.க. எழுநா. இதழ் 4 வேடரும் காலனியமும். எழுநா. இதழ் 4,திருநெல்வேலி(2024)

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*